# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,923/1 — 1970 සැප්තැම්බර් 13 වැනි ඉරිදා — 1970.9.13

14,923/1 ம் இலக்கம் — 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 296/1

ம. தே. அ. எண் : சீ. 314/70 (2)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டின் இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப் பேரவைக் கட்டளைகளின் 46 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் நியமனங்களைச் செய்வதில் மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றுர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

| | |
|---|---|
| 1. பாராளுமன்ற உறுப்பினர், திரு. பர்னுட் சொய்ஸா அவர்கள் | நிதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கலாநிதி நாணயக்காரபதிறகே மாட்டின பெரேரா அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, நிதி அமைச்சராகப் பதிற் கடமையாற்றக் கடவர் |
| 2. வீடமைப்பு, நிர்மாண கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி, பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பமுனு சிங்ஹ ஆராச்சிகே ஹீன் பண்டார அவர்கள் | வீடமைப்பு, நிர்மாண அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ பீட்டர் ஜெருல்ட் பத்தலோமியஸ் கெனமன் அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, வீடமைப்பு, நிர்மாண அமைச்சராகப் பதிற் கடமையாற்றக் கடவர் |

அதி உத்தமஞரின கட்டளைப்படி,

டி. ஸ்ரீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம், கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 13 ந் உ.

9–822.

---

1970 இன் இல. 296/2

ம. தே. அ. எண் : சீ. 162/49 (8)

1970, செத்தெம்பர் மாதம் 5 ஆம் திகதிய 14,922/1 ஆம் எண் கொண்ட (அதிவிசேட) அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பாக, உணவு ஆணையாளர், இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திரு. பீ. பீ. வி. எ. ஜே. பீ. சேனுரத்ன அவர்கள் தமது கடமைகளுடன், கலாநிதி ஜே. பீ. கலேகம அவர்கள் இத்தீவை மீண்டும் வந்தடையும் வரை, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளராகப் பதிற் கடமையாற்றும்படி செய்யப்பட்ட நியமனம் செயற்படும் திகதியானது 1970, செத்தெம்பர் மாதம் 13 ஆம் நாளே தவிர, 1970 செத்தெம்பர் மாதம் 16 ஆம் நாள் அல்ல.

அதி உத்தமஞரின கட்டளைப்படி,

டி. ஸ்ரீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 12.

9–813/1

---

1970 இன் இல. 296/3

ம. தே. அ. எண் : சீ. 162/49 (8)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப் பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்படி, பின்வரும் நியமனங்களைச் செய்வதில் மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றுர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

| | |
|---|---|
| 1. திறைசேரிப் பிரதிச் செயலாளர், இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திரு. சீ. ஏ. குரே அவர்கள் | நிதி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் திறைசேரிச் செயலாளருமாகிய திரு. எம். இராசேந்திரா அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1970 செத்தெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் நிதி அமைச்சின் நிரந்தரச் செயலாளராகவும் திறைசேரிச் செயலாளராகவும் பதிற் கடமையாற்றக் கடவர் |
| 2. வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர், இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திரு. எல். என். ரி. மென்டிஸ் அவர்கள் | வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய கலாநிதி ஏ. எம். எஸ. அமரகோன் அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, 1970 செத்தெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் நிரந்தரச் செயலாளராகப் பதிற் கடமையாற்றக் கடவர் |

| | |
|---|---|
| 3. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பதில் செயலாளர், திரு. எல். டபிள்யூ. மடுகல்லே அவர்கள் | 1970, செத்தெம்பர் 11 ஆம் திகதியிலிருந்து பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுக்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளராகப் பதில் கடமையாற்றக் கடவர் |
| 4. திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக நிரந்தரச் செயலாளராகிய திரு. ஜீ. பீ. டி. எல். பீ. குணதிலக அவர்கள் | திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய பேராசிரியர், எச். ஏ. த. எஸ். குணசேகர அவர்கள் இத்தீவினை வந்தடையும் வரை, 1970 செத்தெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன், திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளராகப் பதில் கடமையாற்றக் கடவர் |

அதி உத்தமரின் கட்டளைப்படி,
டி. ஜீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம், கொழும்பு,
1970 ம் ௵ செத்தெம்பர் ௴ 12 ந் உ.

9–813/2.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 1952 உணவுக் கட்டுப்பாட்டு பிரமாணங்களின் கீழான அறிவித்தல்

1952 உணவுக் கட்டுப்பாட்டு பிரமாணங்களின், பிரமாணம் 4 தலைப்பு உ பகுதி III யின் பிரகாரம் 25 ஆம் தொடர் பங்கீட்டுப் புத்தகங்களிலுள்ள பின்வரும் கூப்பன்கள் கீழே கூறப்பட்டுள்ள காலங்களின்போது செல்லுபடியாகுமென பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | செல்லுபடி காலம் |
|---|---|
| கூப்பன் இல. 4 உம் 5 உம் .. .. | 14.9.70—25.9.70 |

கூப்பன் இல. 4, 5 ஒவ்வொன்றிற்கும் இரண்டு இருத்தல் அரிசி வழங்கப்படும். இதை 14.9.70 தொடக்கம் 25.9.70 வரையுள்ள இடைப்பட்ட காலத்தின் போது எந்த நாளிலாவது பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் இது தற்போது இலவசமாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| கூப்பன் இல. 6 உம் 7 உம் .. .. | 26.9.70— 4.10.70 |

ஒவ்வொரு கூப்பனிற்கும் இரண்டு இருத்தல் அரிசி வழங்கப்படும். அதில் சமான எண்ணுடைய கூப்பன்களுக்கு வழங்கப்படும் இரண்டு இருத்தல்களும் இலவசமாகவும் ஒற்றை எண்ணுடைய கூப்பன்களுக்கு வழங்கப்படும் இரண்டு இருத்தல்களுக்கும் -/75 சதம் கொடுக்கவேண்டியதாகவுமிருக்கும். இவ் விலை தீவு முழுவதிற்கும் உரியதாகும்.

| | |
|---|---|
| கூப்பன் இல. 8 உம் 9 உம் .. .. | 5.10.70—11.10.70 |
| கூப்பன் இல. 10 உம் 11 உம் .. .. | 12.10.70—18.10.70 |

கூப்பன் இல. 6, 7 ஆகியவற்றிற்கான இவ்வொழுங்கு மேலும் அறிவிக்கும் வரை வேண்டிய மாறுதல்களுடன் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

கொழும்பு, 7.9.70.

சி. ஈ. எச். அமரசேகர,
உணவுக் கட்டுப்பாட்டாளர்.

9–812

---

## சுங்க அறிவித்தல் இல. 61/9/459

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினுல் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 1970.9.4 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்:–

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இருத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி .. .. | 0 98 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இருத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை .. .. .. | 0 03 |

எனது இல. ஏ. 781,
மா. ம. சுங்கம்,
கொழும்பு, 1970.9.13.

ஏ. ஈ. பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

9–815

## சுங்க அறிவித்தல் இல. 67/3/147

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,775/17 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பறாவுக்கான மதிப்பீட்டு கொ. கா. கே. விலை 1970.9.14 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1,197.97 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பறா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பறாவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 352 36 .. | 385 71 .. | 327 56 .. | 88 09 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தென்னம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

எனது இல. 744/22.
மா. ம. சுங்கம்,
கொழும்பு, 1970.9.13.

ஏ. ஈ. பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

9-816

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கவனிக்க.—14,922/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இலக்கம் 14,922/7.